1973 டிசம்பர் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேதி அறிவிக்க முடியாது ஆனால், சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இம்மாதிரியாக தற்காலிகமாக வேலை செய்யும் ஆட்கள் இருக்கும்பொழுது, நிரந்தரமாக வேலைக்கு ஆட்கள் தேவைப்படும்பொழுது, வெளியிலிருந்து ஆட்களை எடுக்கக்கூடாது, தற்காலிகமாக வேலை செய்பவர்களையே நிரந்தர மாக்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்காலிகமாக வேலை செய் பவர்களை நிரந்தரமாக்குவது பற்றித் தான் பரிசிலனையில் இருக் கிறது. நிரந்தரமாக்குவதற்கு வேறு வெளியிலிருப்பவர்களிட மிருந்து மனுக்களை வரவழைப்பது என்பது அல்ல

New distillery at Mundiambakkam

* 582 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any distillery has been started at Mundiambakkam near Villupuram in 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். இவ்வடிசாலை 1973 ஜூலையில் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

Collection of arrears from tenants

* 583 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether representations have been made to the Government requesting the postponement by one year of the repayment of land rent arrears by the tenants of flood affected areas; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) It is presumed that by the term " land rent arrears by the tenants " the Hon'ble Member means the arrears of rent payable by the tenants to the landholders. If so, the answer to the question is ' Yes '.

(*b*) The Government have decided that there is no need for the extension of the time-limit allowed under the Tamil Nadu Cultivating Tenant Arrears of Rent (Relief) Act, 1972.

(முற்பகல் 9.30)

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, சென்ற ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும் பல்வேறு குத்தகைதாரர்களும், சாகுபடியாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவுக்கு நெல் அளக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் சிவில் கோர்ட் மூலமாகவும், ரெவின்யூ கோர்ட் மூலமாகவும் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள், சாகுபடிதாரர்கள் நிலைமையை நியாயமான முறையில் பரிசீலித்து, தள்ளுபடி செய்து நெல் அளக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கின்ற குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான நெல் முழுதும் அளக்கப்பட்டிருந்தால், பாக்கியை வசூல் செய்யக்கூடாது என்று இருக்கிறது. வெள்ளத்தால் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதை பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவும் விதியில் இடம் இருக்கிறது.

Sugar Cane Cess Fund

* 584 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to utilise the Sugar Cane Development Cess Fund for executing village roads; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 1972-73-ம் ஆண்டு ஜூலை திங்களில் 47 சாலைப் பணிகளுக்கு 265.68 லட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 1972-73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1973-74-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.